பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 05 2025 **TUESDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திர மோடியுடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

2. அவசரகால பாதுகாப்பு ஒத்திகை தொடர்பான ஏற்பாடுகள் குறித்து மத்திய உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன், மாநில தலைமைச் செயலாளர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

3. அறிவாற்றலில் சிறந்து விளங்கும் இந்தியர்களுக்கு உலக அளவில் பெரும் வரவேற்பு இருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் இன்று முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையின் போது, நாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் ஏற்கனவே, ராணுவம், கடற்படை, விமானப்படை தலைமை தளபதிகள் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ள நிலையில், திரு. அஜித் தோவல் இரண்டாவது முறையாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<<

அவசரகால பாதுகாப்பு ஒத்திகை தொடர்பாக, மத்திய உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன், அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுடன் இன்று ஆலோசனை நடத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இக்கூட்டத்தில், உள்நாட்டு பாதுகாப்புப் பிரிவு தலைமை இயக்குநர், தேசிய பேரிடர் மீட்புப் படையின் தலைமை இயக்குநர் உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

நாட்டில் உள்ள 244 மாவட்டங்களில், நாளை பாதுகாப்பு ஒத்திகை மேற்கொள்ள மத்திய அரசு அறிவுறுத்தியுள்ள நிலையில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன் கேட்டறிந்தார்.

வான்வழி தாக்குதல் குறித்த எச்சரிக்கை, இந்திய விமானப்படையை தொடர்பு கொள்வதற்கான ஹாட் லைன் வசதி மற்றும் கட்டுப்பாட்டு அறைகளின் ஆயத்த நிலையை உறுதி செய்வதற்காக இந்த ஒத்திகை மேற்கொள்ளப்படவுள்ளது.

>>>>>>>><<<<<<<<<<

அறிவாற்றலில் சிறந்து விளங்கும் இந்தியர்களுக்கு உலக அளவில் பெரும் வரவேற்பு உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று, இந்தியர்களின் திறமையை உலக அளவில் பயன்படுத்துவதற்கான **GATI** அமைப்பின் தொடக்க விழாவில் பேசிய அவர், உலகளாவிய இந்த தேவையை இந்தியா பூர்த்தி செய்யும் என்று தெரிவித்தார்.

பணியிடம், தொழிலாளர்களின் திறன், புவியியல் மாற்றங்கள், புதிய தொழில்நுட்ப தேவை, கலாச்சாரம் மற்றும் பணிவரன்முறைகள் காரணமாக, உலக அளவில் ஏற்பட்டுள்ள வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திறன் பயிற்சி, தொழிற்கல்வி போன்றவற்றின் தரத்தை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இதன் காரணமாக இந்திய தொழிலாளர்கள், தற்கால தேவைகளுக்கு ஏற்ப ஆற்றல்மிக்கவர்களாக திகழ்வதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<<<

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் சொத்து விவரங்களை இணையதளத்தில் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தில் தற்போது பணியில் உள்ள 33 நீதிபதிகளில், இதுவரை 21 நீதிபதிகளின் சொத்து விவரங்கள் உச்சநீதிமன்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய நீதிபதிகளின் சொத்து விவரங்கள் கிடைக்கப் பெற்றதும், அவற்றையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவுள்ளதாக உச்சநீதிமன்ற செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற செயல்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் அமைவதை உறுதி செய்யும் நோக்கில், கடந்த மாதம் 1ஆம் தேதி உச்சநீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகள் பங்கேற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<<<

சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், கணக்கெடுப்பிற்கான நடைமுறைகளை உள்துறை அமைச்சகம் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், கணக்கெடுப்பின் முடிவு எத்தகையதாக அமைந்தாலும், இடஒதுக்கீட்டுக்கான 50 சதவீத உச்சவரம்பை ரத்து செய்வதுடன், தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீட்டை அமல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் திரு. மல்லிகார்ஜுன கார்கே தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<<

உலக ஆஸ்துமா தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆஸ்துமா நோய் பாதிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்நாள் வாய்ப்பாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நோய் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை மற்றும் பராமரிப்பை மேற்கொள்வதன் மூலம், லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறையினரும், சமூகத்தினரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதன் மூலம் நோய் பாதிப்பை குறைக்க முடியும் என்றும் திரு. ஜெபி. நட்டா கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<<

குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களில் சேர்க்கப்படும் சர்க்கரையின் அளவு குறித்து, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் உணவு மற்றும் பொதுவிநியோகத்துறைக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழு, இன்று கூடி ஆலோசனை நடத்துகிறது.

குழுவின் தலைவர் திருமதி. கனிமொழி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

இதேபோன்று, மகளிர் அதிகாரமளித்தலுக்கான நிலைக்குழுவின் கூட்டம் அதன் தலைவர் திருமதி. புரந்தேஸ்வரி தலைமையிலும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் கூட்டம் அக்குழுவின் தலைவர் திரு. மாகுந்த சீனிவாசலு ரெட்டி தலைமையிலும் நடைபெறவுள்ளது.

>>>>>>>><<<<<<<<<<

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம், பவித்திரம் பகுதியில் ஜல்லிக்கட்டுப் போட்டி இன்று நடைபெற்று வருகிறது. இதில் 700-க்கும் மேற்பட்ட காளைகளும், 400க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களும் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கண்ணன் 46 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<<<<<

பீகார் மாநிலம், கத்திஹார் மாவட்டத்தில் காரும், டிராக்டரும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர், 2 பேர் காயமடைந்தனர்.

திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றவர்கள் காரில் திரும்பும் வழியில் **Sameli** என்னுமிடத்தில் நள்ளிரவில் இந்த விபத்து நேரிட்டதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. வைபவ் சர்மா தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<<<

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, குஜராத் உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ராயலசீமா பகுதிகளிலும் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஆந்திரா, கேரளா, மாஹே, ஏனாம் உள்ளிட்ட பகுதிகளில் நாளை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்ராகண்ட்டில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி அருணாச்சலப்பிரதேசத்தில் வரும் 9ஆம் தேதி முதல் 18ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**Arush Hari, Rohit, Ashik Athikari** உள்பட 23 பேர் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

வரும் 9ஆம் தேதி நடைபெறவுள்ள முதல் போட்டியில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

>>>>>>>><<<<<<<<<<

தைபே ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Mansi Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 22-20, 14-21, 21-17 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் **Hsin Pei-**யை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் ரகு மாரிசாமியும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<<

சர்வதேச பாரா பேட்மிண்டன் போட்டி துபாயில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் சரவணகுமார் முத்துசாமி, **Harshit Chaudhary, Krishna Nagar, Shivarajan Solaimalai** ஆகியோர் ஆடவர் பிரிவிலும், **Shabana** மகளிர் பிரிவிலும் பங்கேற்றுள்ளனர்.

>>>>>>>>END<<<<<<<<<